**வாக்குமூலம்**

**மவாட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**C.C.No. 10/2023**

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **செல்வம்** | தொழில் | சார்பு ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : பெரியசாமி | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : தாண்டிக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 59/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 08.06.2026 |

**( எதிரிகள் A1, A2 மற்றும் A3 ஆகியோர் மனுவின்பேரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்சமயம் தாண்டிக்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளரான அன்பழகன் என்பவரது கையெழுத்தும், கையொப்பமும் நன்கு பரீட்ச்சையும் என்பதன் அடிப்படையிலும் மேற்சொன்ன சார்பு ஆய்வாளர் அன்பழகன் பணிமூப்பு பெற்று சென்றுவிட்டபடியால் நீதிமன்ற காலவிரயத்தை கருதி ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் . கடந்த 02.04.2023 ம் தேதி சார்பு ஆய்வாளர் அன்பழகன் நிலைய பொறுப்பில் இருந்தபோது காலை 10.45 மணியளவில் பூலத்தூரைச் சேர்ந்த சுப்பன் மகன் சந்திரமணிகண்டன் என்பவர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று நிலையக் குற்ற எண் 49/2023 இ.த.ச.பிரிவு 294(b), 323, 427, 206(2) இ.த.ச மற்றும் பிரிவு 4 TNPHW Act – ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் . வாதி சந்திரமணிகண்டன் கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். சார்பு ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும். சார்புஆய்வாளர் அன்பழகன் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 02.04.2023 ம் தேதி மதியம் 13.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மருதன் , வினோத்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி

வரைபடம் முறையே **அ.சா.ஆ.3** மற்றும் **அ.சா.ஆ.4** ஆகும். இவ்வழக்கு தொடர்புடைய சாட்சிகளான சந்திரமணிகண்டன், சோனியா, சென்றாயன், சுரேஷ் மற்றும் மேற்சொன்ன பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . இவ்வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவர எதிரிகள் சூரியா , பிரபாகரன் @ தங்கம் , மருத ஐய்யப்பன் @ சரன்ராஜ் ஆகியோர்களை தேடி வந்தநிலையில் எதிரிகள் உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் அவர்களை கைது செய்யவில்லை . இவ்வழக்கின் காயமுற்ற சாட்சியான சந்திரமணிகண்டன், சோனியா ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த பண்ணைக்காடு அரசு மருத்துவமனை மருத்துவர் ஆனந்த பசவன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, அவரிடம் இருந்து காயச்சான்றிதழ்கள் பெற்றுள்ளார் . அந்த காயச்சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ.5** மற்றும் **அ.சா.ஆ.6** ஆகும். இத்துடன் சார்பு ஆய்வாளர் அன்பழகன் அவரது வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் சூரியா , பிரபாகரன் @ தங்கம் , மருத ஐய்யப்பன் @ சரன்ராஜ் ஆகியோர்கள் மீது இ.த.ச.பிரிவு 294(b), 323, 427, 206(2) இ.த.ச மற்றும் பிரிவு 4 TNPHW Act –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நீங்கள் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில், சொன்ன முறையில் சார்பு ஆய்வாளர் புகார் மனு பெறவில்லை என்றாலும் , காவல் நிலைய கணக்கிற்காக வேண்டி எதிரிகள் மீது பொய்யான புகாரின் அடிப்படையில் இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . புகார்தாரர் சந்திரமணிகண்டன் தூண்டுதலின்பேரில் போலியான சங்கதிகளின் அடிப்படையில் எதிரிகள் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . சார்பு ஆய்வாளர் எந்த ஒரு சாட்சியையும் முறையாக விசாரணை செய்யவில்லை என்றாலும் , வழக்கு கோப்புகள் அனைத்தும் புகார் சங்கதிகளுக்கு ஏதுவாக காவல் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.08 14:29:16 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.